DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No. 15/2024**

அ.சா.6

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | குப்பத்துராஜா | Caste: | |
| Father's Name: | முனியாண்டி | Calling: | விவசாயம் |
| Village: | கே. நெடுங்குளம் | Religion: | |
| Taluk: | கமுதி | Age: | 45 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 12.12.2025

( எதிரி ஆஜர். )

**முதன்மை விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் கமுதி தாலுகா கே. நெடுங்குளம் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 முதல் 3 சாட்சிகளான புஷ்பராஜ், இருளாயி, பெரியசாமி மற்றும் சா.ப.சா.4 மாணிக்கம் ஆகியோர்களை தெரியும். மாணிக்கம் இறந்துவிட்டார். நாங்கள் பட்டியல் இனத்தை சேர்ந்த தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர்கள். எதிரியை தெரியும். அவர் பக்கத்து கிராமமான முதுநாடு கிராமத்தை சேர்ந்தவர். அவர் சீர்மரபினர் வகுப்பை சேர்ந்த மறவர் சமூகத்தை சேர்ந்தவர். கடந்த 08.02.2024ம் தேதி அ.சா.1 புஷ்பராஜும் அ.சா.2 இருளாயியும் கலைக்குளம் கிராமத்தில் ஆடுமேய்த்து கொண்டிருந்தார்கள். புஷ்பராஜ் மற்றும் இருளாயியின் ஆடுகள் எதிரி செந்தூரான் சோளம் பயிரிட்டிருந்த நிலத்தில் இறங்கிவிட்டதாகவும், அதனால் எதிரி அவர்கள் இருவரையும் மூங்கில் கம்பால் கருப்பசாமி கோவில் அருகே மதியம் 11-12.00 மணியளவில் அடித்துவிட்டதாக பெரியசாமியும் மாணிக்கமும் தகவல்

சொன்னார்கள். நான் உடனே கருப்பசாமி கோவிலுக்கு சென்று பார்த்தபோது புஷ்பராஜின் ஒரு கையில் விரல் பகுதியில் காயம் இருந்ததை பார்த்தேன். இருளாயியின் இடது தொடையில் வீக்கக்காயம் இருந்ததையும் பார்த்தேன். ஒரு ஆட்டோ வரவைத்து அவர்கள் இருவரையும் கமுதி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தபோது மணி மதியம் 1.00 இருக்கும். அதன்பிறகு போலிசார் என்னை விசாரித்தார்கள். விசாரித்தபோது மேலே சொன்ன விவரத்தை சொன்னேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

இல்லை

Sd./C.Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)